# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.248/2025
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| Name | முருகேசன் | -- | |
|---|---|---|---|
| Father's Name | அருணாசலம் | Calling | விவசாயம் |
| Village | வைத்தியலிங்கபுரம் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா வைத்தியலிங்கபுரம், அண்ணா நகர் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி சோலைமுருகன் எனது ஊரை சேர்ந்தவர். என்னுடைய உறவினர் அல்ல. இவ்வழக்கில் இறந்துபோன குருநாதன் சாட்சி சோலை முருகனின் அண்ணன் ஆவார். 08.07.2023 ம் தேதி இரவு 08.45 மணியளவில் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் வைத்தியலிங்கபுரத்திலிருந்து திருவில்லிபுத்தூர் சென்றுக்கொண்டிருந்தேன். திருவில்லிபுத்தூர் – மதுரை ரோட்டில் விஷ்ணு பழக்கடைஅருகில் நான் சென்றுக்கொண்டிருந்தபோது ஒரு சத்தம் கேட்டது. டாட்டா ஏஸ் வாகனத்தை ஒரு ஈச்சர் வாகனம் ஓவர்டேக் செய்து தெற்கிலிருந்து வடக்குநோக்கி சென்றுக்கொண்டிருந்த குருநாதன் என்பவர் மீது மோதிவிட்டது. மேற்படி ஈச்சர் வண்டியின் பதிவெண் TN 33 AM 9734 ஆகும். மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் அப்போது பார்க்கவில்லை. விபத்து நடந்த பதற்றத்திலும் இரவு நேரமாக இருந்ததாலும் மேற்படி வாகன ஓட்டுநதை நான் பார்க்கவில்லை. குருநாதனை நான் பார்த்தபோது அவருக்கு வலது பக்கம் கை, கால், வலது பக்க தலை மற்றும் இடது பக்கத்திலும் காயம் இருந்தது. அப்போது அவ்வழியாக வந்த ஆட்டோவில் காயப்பட்ட குருநாதனை அந்த ஆட்டோவில் வந்த கணேசன் என்பவருடன் சிகிச்சைக்காக திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். குருநாதனின் தம்பி சோலை முருகனுக்கும் இந்த விபத்து பற்றி தகவல் தெரிவித்தேன். இந்த விபத்து சம்பந்தமாக சோலை முருகன் புகார் கொடுத்ததாக தெரிந்துக்கொண்டேன். அதன் பின்னர் மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து மேற்படி குருநாதன் இறந்துபோய்விட்டதாக தகவலை நான் தெரிந்துக்கொண்டேன். நான் விசாரித்தபோது

மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் விஜயன் என்று தெரிந்துக்கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக முதலில் என்னை உதவி ஆய்வாளரும் பின்னர் ஆய்வாளரும் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**